# என் உள்ளம் கவர்ந்த கவிஞர்

தமிழ் இலக்கியம் ஒரு பூஞ்சோலை. அதில் நாளும் மலரும் இலக்கிய மலர்கள் ஏராளம், ஏராளம்! அந்த இலக்கிய மலர்களில் மணம் உண்டு. அந்த மலர்களின் மணத்தைக் அதிகம் நுகர்ந்தவர் கவிஞர் கண்ணதாசன். ஆம்! அவரே என் உள்ளம் கவர்ந்த கவிஞர்.

கவியரசு கண்ணதாசனின் தமிழே அலாதியானது. அவருடைய தமிழ் உரைநடை, நீரோடை போன்ற தெளிவான நடை. அவருடைய படைப்புகள் அனைத்தும் அவருடைய முத்திரையைப் பெற்றிருக்கும். கவிஞர் அவர்களின் கவிதை நடையும், உரை நடையும் கேட்போர் அனைவரையும் மயங்க வைக்கும்; கிறுகிறுக்க வைக்கும்.

என் உள்ளம் தொட்ட கவிஞர் கண்ணதாசன், கதை யாப்பதிலும் பாடல்களை இயற்றுவதிலும் சிறந்தவர். கவிஞர் கண்ணதாசன் அவர்களின் கதை, கவிதை, பாடல்கள் ஆகியவற்றை ஆராய்ந்து அவரை மேலும் சிறப்பிக்க என் உள்ளம் துடிக்கிறது.

சாதாரண மக்களுக்கும், கவிஞனுக்கும் உள்ள வேறுபாடு என்ன? அன்றாட வேலைகளைக் கவனிப்பதோடு சாதாரண மாந்தர்களின் வாழ்வு முடிந்து விடுகிறது ஆனால், இறவாத கவிஞனின் வாழ்வோ புகழுடையதாக அமைகிறது.

**"என்றுவரை செங்கதிரில் ஒளி இருக்கும்**
**என்றுவரை நிலவினிலே குளிர் இருக்கும்**
**என்றுவரை இமயமலை நிமிர்ந்து இருக்கும்**
**அன்றுவரை என் கவிதை நிலைத்திருக்கும்"**

என்று உறுதியுடன் கூறுகிறார் கவிஞர் கண்ணதாசன். வில் எடுத்தவனெல்லாம் அர்ச்சுனன் ஆக முடியாது. அதைப் போல் பேனா பிடித்தவனெல்லாம் கவிஞனாகிவிட முடியாது. கவிஞன் என்பவன் உணர்ச்சி அலைபுரள, மனத்திலே ஓர் உந்துதலாலே தள்ளப்பட்டு அதனை நிறைவு செய்யத் தன் உள்ளத்தைக் கொட்டித் தீர்க்கிறவனே உண்மைக் கவிஞன்.

கவிஞர் கண்ணதாசன் பலவகைக் கவிதைகளை இயற்றியுள்ளார். அவரின் கவிதைகளைப் படிக்கும்போது, நான் என்னை மறந்ததும் உண்டு அவர் வரைந்த கவிதைகளில் என்னை மிகவும் கவர்ந்தது.

**"பொன்னாசை உறவை வெட்டும் பொருளாசை பகையை ஊட்டும்**
**பொண்ணாசை மிருகமாக்கும் பேராசை உயிரை வாங்கும்**
**மண்ணாசை போரில் மூழ்கும்"**
என்பதாகும்.

மறைந்த கண்ணதாசன் பல நாவல்களையும், கட்டுரைகளையும் புத்தகங்களாக வெளியிட்டுள்ளார். அவர் எழுதிய நாவல்களுள் மனதுக்குத் தூக்கமில்லை, விளக்கு

மட்டுமா சிவப்பு, பிருந்தாவனம் அவளுக்காக ஒரு பாடல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. அவருடைய கட்டுரைகள் அவருக்குப் பெருமையைத் தேடித்தந்துள்ளன. குறிப்பாக அவர் எழுதிய 'அர்த்தமுள்ள இந்து மதம்' பல பாகங்களைக் கொண்டுள்ளது. இது பலரின் பாராட்டைப் பெற்ற நூலாகும்.

எத்தனையோ அறநிலையங்கள் ஒன்று கூடிச் செய்ய வேண்டிய பணிகளை, போதிக்க வேண்டிய அறநெறிகளைத் தனி ஒரு மனிதர், தம் எழுத்து வன்மையால் சாதித்து நல்வழிப்படுத்தினார் என்றால் அப்பெருமை கவிஞர் கண்ணதாசனையே சாரும். இது அவருக்கு இறைவன் அளித்த நற்பேறு. இனி ''அர்த்தமுள்ள இந்து மதம்'' என்ற நூலின் முதல் பாகத்திலிருந்து அவர் கூறும் கருத்தைக் கேட்போம்.

''நம்மிடம் ஏதுமில்லை என்று நினைப்பது ஞானம். நம்மைத் தவிர ஏதுமில்லை என்று நினைப்பது ஆணவம். அடக்கத்தில் இருக்கும் சுகம் ஆணவத்தில் இல்லை. அடங்கி வாழ்வதால் ஆயுள்காலம் முழுவதும் ஓங்கி வாழலாம் என்பதே இந்து மதத்தின் சாரம்''.

இந்நூலில் ''கல்லானாலும்.......... புல்லானாலும்............'' என்ற அதிகாரத்திலிருந்து மற்றொரு பகுதி, ''பெண்ணைத் தெய்வமாக்கி கணவனைப் பக்தனாக்கி வாழ்க்கையைச் சந்தோஷமாக்க இந்து மதம் எடுத்துக்கொண்ட முயற்சியைப் போல், வேறு எந்த மதமும் எடுத்துக் கொண்டதில்லை. அந்நிய புருஷன் தன்னைப் பார்க்கிறான் என்று தெரிந்ததும் முந்தானையைச் சரி செய்து கொள்ளும் பெண்கள், இந்து மதத்தின் சிருஷ்டிகள்'', என்று கூறுகிறது.

அவர் எழுதிய நாவல்களில் என்னை மிகவும் கவர்ந்தது ''மனதுக்குத் தூக்கமில்லை''. இந்நூலில் மனத்தின் எண்ணங்களையும் அசைவுகளையும் பலவாறு வர்ணித்துள்ளார் கண்ணதாசன். மேலும், இந்நூலின் தத்துவங்கள் என் மனத்தில் ஆழமாகப் பதிந்துள்ளன. இந்நூலில் என்னைச் சிந்திக்கவைத்த பகுதிகள்.

''உலகில் தப்பு என்று சில விஷயங்களைக் கருதுகிறோம் ஆனால் அவை நிதானமாகவும் முறையாகவும் நடக்கும்போது அவையே நியாயங்களாகி விடுகின்றன!''

''காதலனையும் காதலியையும் கடலோ மலையோ பிரித்தால்தான் கடவுளுக்கு நிம்மதி!'' என்பனவாகும்.

தமிழ்த் திரைப்பட உலகின் பாட்டுத் துறையில் கவியரசு கண்ணதாசன் அவர்களுக்குத் தனி இடம் உண்டு. அவர் தற்போது நம்மிடையே இல்லையெனினும் அவரது பாடல்கள் தினமும் அவரை நினைவூட்டிக்கொண்டு தான் இருக்கின்றன. பாரதிக்குப் பின்னர் எளிய நடையிலே பாடல்களை எழுதிப் பொது மக்களின் நெஞ்சங்களைக் கவர்ந்தவர் கவியரசர் கண்ணதாசன். ''பாட்டு என்பது கேட்பவர்களுக்குப் பொருள் புரியும் வகையில் அமைய வேண்டும். அப்போதுதான் அது இன்பத்தைத் தரும்'', என்பது அவரது கருத்து.''கவிச்சக்கரவர்த்தி கண்ணதாசன் தம் பெயருக்கேற்பச் சக்கரவர்த்தியாகத்தான் திகழ்ந்தார்'', என்ற புலவர் தமிழ்ப்பித்தன் கூறுகிறார்.

கண்ணதாசனின் கவிதைகள், கதைகள், பாடல்கள் யாவும் என் மனத்தை விட்டு அகலாதவை. அவரின் பெருமைகளையும், திறமைகளையும் கண்டு நான் வியப்பதுண்டு. இக்கவிஞரின் அகால மரணம் இப்புவிக்குப் பேரிழப்பு என்பதே எனது கருத்தாகும். கண்ணதாசனுக்கு இணை கண்ணதாசனே ஆவார் என்பதை யாரும் மறுக்கவல்லார்?

**இரா.பானுமதி**
**அங் மோ கியோ உயர்நிலைப் பள்ளி**
**புகுமுக வகுப்பு 1 மேல்நிலை (1986)**